“தர்மம் சர,,

அக்டோபர் (15 .10.2026) ● கும்பகோணம் ● பிரதி-26

ப்ரஹ்மஶ்ரீ குருராம கனபாடிகள் பேசுகிறார்



க்ரஹஸ்த தர்மம்: ஸம்ஸ்காரங்களின் வழிப் பயணம்

ஜீவாத்மாவுக்குப் பரிசுத்தி ஏற்படுவதற்காக நாற்பது ஸம்ஸ்காரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன அதிலே விவாஹம் வரை நாம் நமது தர்மம் சர மாத இதழில் பார்த்தோம். விவாஹத்திற்கு பிறகு கிருஹஸ்தன் செய்யவேண்டிய ஐந்து நித்ய கர்மாக்களாகிய பஞ்ச மஹா யக்ஞங்கள் ஆக, இதுவரை மொத்தம் பத்தொன்பது; இதோடு கிருஹஸ்தன் செய்ய வேண்டிய பாக யக்ஞங்கள் ஏழும், ஹவிர் யக்ஞங்கள் ஏழும், ஸோம யக்ஞங்கள் ஏழும் ஆக யக்ஞங்கள் இருபத்தொன்றும் ஸம்ஸ்காரங்களே ஆகும். 19+21=40 ஸம்ஸ்காரம்.

அஷ்டகை (அன்வஷ்டகை) , ஸ்தாலீபாகம், பார்வணம், ச்ராவணி, ஆக்ரஹாயணி, சைத்ரி, ஆச்வயுஜி என்ற ஏழும் பாக யக்ஞங்கள். அக்னியாதானம், அக்னிஹோத்ரம், தர்சபூர்ண மாஸம், ஆக்ரயணம், சாதுர்மாஸ்யம், நிரூடபசுபந்தம், ஸௌத்ராமணி என்ற ஏழும் ஹவிர் யக்ஞங்கள். அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உக்த்யம், ஷோடசி, வாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம் என்னும் ஏழும் ஸோம யக்ஞங்கள். நாற்பது ஸம்ஸ்காரங்களில் தினந்தோறும் பண்ண வேண்டியவை சில இருக்கின்றன. சில சில காலங்களில் பண்ணவேண்டியவை சில. ஆயுளில் ஒரு தரம் பண்ண வேண்டியவை சில. இவைகளுக்குள் ஒவ்வொரு கிருஹஸ்தனும் நன்றாகத் தெரிந்துகொண்டு தினமும் செய்யவேண்டிய முக்கியமான ஸம்ஸ்காரங்கள் பஞ்ச மஹா யக்ஞங்கள் என்ற ஐந்து. மந்திரமில்லாமல் வெறுமே செய்யும் காரியத்தைவிட, மந்திரத்தைச் சொல்லிச் செய்வதே அதிக நன்மை தர வல்லது. இப்படி மந்திரபூர்வமாகக் காரியம் பண்ணுவதே ஸம்ஸ்காரமாகிறது. கிருஹஸ்தன் தினந்தோறும் செய்யவேண்டிய பஞ்சமஹா யக்ஞத்தில் ஸோஷல் சர்வீஸ் (சமூக ஸேவை) என்பது மந்திர பூர்வ ஸம்ஸ்காரமாகிறது.

பஞ்ச மஹா யக்ஞங்கள் – பிரம்ம யக்ஞம், தேவ யக்ஞம், பித்ரு யக்ஞம், மநுஷ்ய யக்ஞம், பூத யக்ஞம் என்பவை. வேதம் ஓதுவது என்ற அத்யயனமே பிரம்ம யக்ஞம், யாகமும் பூஜையும் தேவ யக்ஞம். தர்ப்பணம் பித்ரு யக்ஞம். விருந்தோம்பல் மநுஷ்ய யக்ஞம். ஜீவ ஜந்துக்களுக்கெல்லாம் பலி போடுவது பூத யக்ஞம். இவை போலவே ஔபாஸனம், அக்னி ஹோத்ரம் இரண்டும் தினசரி செய்வது. ஔபாஸனம் என்பது நாற்பது ஸம்ஸ்காரத்திலுள்ள ஏழு பாக யக்ஞங்களில் சேராத ஒரு பாக யக்ஞம். அக்னிஹோத்ரம் என்பது ஏழு ஹவிர் யக்ஞங்களில் ஒன்று. தர்ச பூர்ண மாஸம் என்ற இன்னோர் ஹவிர் யக்ஞம் பதினைந்து நாளுக்கு ஒருமுறை செய்வது. மற்ற ஐந்து ஹவிர் யக்ஞங்களையும் ஏழு ஸோம யக்ஞங்களையும் வருஷத்துக்கொரு முறையோ, அல்லது ஆயுஸில் ஒரே ஒரு தடவையாவது செய்யவேண்டும். கஷ்டமான ஸோம யாகங்களை ஜன்மாவில் ஒருமுறை பண்ணினால் போதும் என்று கருணையோடு வைத்திருக்கிறார்கள். மாஸம்தோறும் பண்ணவேண்டிய பார்வணீ சிராத்தமும், பிரதமைகளில் செய்யும் ஸ்தாலீபாகமும் தவிர மற்ற ஐந்து பாக யக்ஞங்களும் வருஷத்துக்கு ஒரு முறைதான்.

இதையே வேறு விதமாக வகுத்துச் சொன்னால்: பஞ்ச மஹா யக்ஞம் என்ற ஐந்தும், அக்னி ஹோத்ரமும், ஔபாஸனமும் ஆக ஏழு தினசரி செய்வது. தர்ச பூர்ண மாஸம் பக்ஷமொருமுறை; ஸ்தாலீபாகமும் பக்ஷமொரு முறை; பார்வணீ மாஸாந்தரம்; நாற்பதில் உள்ள மற்ற யக்ஞங்கள் ஸம்வத்ஸரத்துக்கு [ஆண்டுக்கு] ஒரு தரமோ, ஜன்மத்தில் ஒரு முறையோ பண்ண வேண்டியவை.
ஒரு போகம் விளையும் நிலங்களில் அறுப்பறுக்கிறது வருஷத்துக்கு ஒரு தரம். முப்போகம் விளைந்தால் நாலு மாஸத்துக்கொரு அறுப்பு. சில பயிருக்கு ஜலம் தினந்தோறும் பாய்ச்சவேண்டும். சிலவற்றுக்கு ஒன்றுவிட்டு ஒரு நாள் பாய்ச்ச வேண்டும். இவைகளெல்லாமே ஸம்ஸ்காரங்கள் தான். ஆனாலும் இவைகளுக்குள் வித்தியாஸம் இருக்கிறது. அவைகளைப் போன்றவைதான் மநுஷ்யனுக்கான ஸம்ஸ்காரங்களும்.

धर्मं चर । स्वाध्यायान्मा प्रमदः । देवपितृकार्याभ्यां न प्रमदितव्यम्

தொடரும் .

ஸ்ரீமதி ஸௌம்யா குருராமன்



மாதா சாஜிபாய்

சத்ரபதி சிவாஜியின் அன்னையும் வீரத்தின் உருவமும்

இந்திய வரலாற்றில் போற்றப்படும் மாவீரன் சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் வாழ்க்கையில் மிக முக்கியமான பங்கும், அவரது வெற்றிகளுக்கு அச்சாணியாக விளங்கியவரும் அவரது தாயாரான ஜீஜாபாய் (சாஜிபாய்) ஆவார். ஒரு தாயாக மட்டுமல்லாமல், சிறந்த குருவாகவும், போர்க்கால வழிகாட்டியாகவும், நிர்வாகியாகவும் திகழ்ந்து சிவாஜியை சத்ரபதியாக மாற்றியவர் அன்னாரே.

ஜீஜாபாய் அவர்கள் லூகோஜி ராஜே ஜாதவ் - மக்சாபாய் தம்பதியினருக்கு மகாராஷ்டிராவில் உள்ள சிந்த்கேட் என்னுமிடத்தில் பிறந்தார். இவர் ஒரு புகழ்பெற்ற மராட்டிய பிரபு குடும்பத்தைச் சேர்ந்தவர்.



ஷாஜி போஸ்லே என்பவருக்கு ஜீஜாபாய் மணமுடிக்கப்பட்டார். இவர்களுக்குப் பல குழந்தைகள் பிறந்தாலும், பலர் சிறு வயதிலேயே இறந்துவிட்டனர். இறுதியாகப் பிறந்தவரே பிற்காலத்தில் உலகறியப்பட்ட சத்ரபதி சிவாஜி ஆவார்.ஷாஜி போஸ்லே தொடக்கத்தில் பீஜப்பூர் சுல்தான்களிடமும், பின்னர் முகலாயர்களிடமும் படைத்தளபதியாகப் பணிபுரிந்தார்.

அரசியல் சூழல் காரணமாக ஷாஜி போஸ்லே தனது இரண்டாம் மனைவியுடன் வாழத் தொடங்க, ஜீஜாபாய் தனது இளைய மகன் சிவாஜியுடன் தனியாக வாழ வேண்டிய சூழல் ஏற்பட்டது. இருப்பினும், இந்தத் தனிமை அவரை முடக்கிவிடவில்லை; தன் மகனை ஒரு மாவீரனாக வளர்க்கும் லட்சியத்தை நோக்கித் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார்.
சிறு வயதிலிருந்தே சிவாஜிக்கு ராமாயணம், மகாபாரதம் மற்றும் புராணக் கதைகளைக் கூறி ஆன்மீக ஈடுபாட்டையும் தர்ம நெறியையும் ஊட்டியவர் ஜீஜாபாய்தான்.
அந்நியர்களின் (முஸ்லிம் சுல்தான்கள் மற்றும் முகலாயர்கள்) அடிமைத்தனத்திலிருந்து மராட்டியர்களை விடுவித்து, தர்ம ஆட்சியை (சுவராஜ்யம்) ஸ்தாபிக்க வேண்டும் என்ற கனவைச் சிவாஜியின் மனதில் ஆழமாக விதைத்தவர் அவர்தான். தாதாஜி கொண்டதேவ் போன்றவர்களின் உதவியுடன் சிவாஜிக்கு வாள்வீச்சு, குதிரையேற்றம் மற்றும் அரசியல் தந்திரங்களைக் கற்பிக்க முழுமூச்சாக நின்றார்.தாதாஜி கொண்டதேவ் உதவியுடன் புணே (Pune) மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை மீட்டெடுத்து, விவசாயத்தையும் மக்களையும் பாதுகாத்து ஒரு சிறந்த நிர்வாக முறையைத் தொடங்கினார்.

சிவாஜி தனது இளம் வயதில் மாவா பகுதிகளைக் கைப்பற்றி சுவராஜ்யத்திற்கான சத்தியத்தை (ராய்45 தீட்சித்) மேற்கொண்டபோது, தாயின் ஆசியும் வழிகாட்டுதலுமே அவருக்குப் பலமாக இருந்தது. எந்தவொரு கடினமான சூழ்நிலையிலும் சிவாஜிக்குத் தைரியம் ஊட்டும் அரணாக ஜீஜாபாய் திகழ்ந்தார்.

தனது மகனின் வெற்றிகரமான ஆட்சியையும், மராட்டிய சாம்ராஜ்யம் மலர்ந்ததையும் கண்குளிரக் கண்ட மாதா ஜீஜாபாய், சிவாஜி சத்ரபதியாக முடிசூட்டிக் கொண்ட சில நாட்களுக்குப் பிறகு, 17-ஆம் நூற்றாண்டில் காலமானார்."ஒரு தாய் நினைத்தால் எத்தகைய மாவீரனை உருவாக்க முடியும் என்பதற்குச் சாட்சியாகத் திகழ்ந்தவர் ஜீஜாபாய்." சத்ரபதி சிவாஜியின் பல வெற்றிகளுக்குப் பின்னால் இருந்த மாபெரும் சக்தி அவரது தாயாரின் உத்வேகமே ஆகும்.

"लोका: समस्ता: सुखिनो भवन्तु"

தொடரும் .



“அடிப்படை தர்மங்கள்”

வித்வான்
விரூபாக்ஷ சர்மா

வாய்க் கொப்பளிக்கும் முறை.

अपां द्वादशगण्डूषान् पुरीषोत्सर्जने द्विजः ।
मूत्रेषु चतुरःकुर्यात् भोजनान्ते तु षोडश ।।

மல விஸர்ஜன காலத்தில் 12 தடவை வாய்க் கொப்பளிக்க வேண்டும், மூத்ர விஸர்ஜனத்தில் 4 தடவையும், போஜனம் செய்த பிறகு 16 தடவையும் வாய்க் கொப்பளிக்க வேண்டும்.



ஸ்ரீ சர்மா சாஸ்திரிகள்

எவரிடமும் பிரகடனப்படுத்தக் கூடாத விஷயங்கள்

न कञ्चिदात्मनः शत्रु नात्मानं कस्यचिद्रि पुम्।
प्रकाशयेन्नापमानं न च निःस्नेहतां प्रभोः ।।

எவரையும் தனக்கு எதிரி என்றோ எவருக்கும் தான் எதிரி என்றோ பிரகடனப்படுத்தாதே, தனக்கு ஏற்பட்ட அவமதிப்பை வெளிப்படுத்தாதே. தனது எஜமானன் தன்னிடம் ப்ரியமாக இல்லையென வெளிப்படையாகக் கூறாதே.

வேங்கடேஷ்- பூர்வமீமாம்ஸா சிரோமணி

அத்வைத கதைகள்

ॐ हेयत्वावचनाच्च ஓம் ஹேயத்வாவசனாச்ச

ஒரு ஊரில் வசந்தன் என்ற ஒரு வாலிபன் இருந்தான். அவன் வாழ்க்கையின் நிலையற்ற தன்மையைக் கண்டு வருந்தி, உண்மையான நிம்மதியைத் தேடி ஒரு குருவை நாடிச் சென்றான்.

குரு அவனிடம் சில பயிற்சிகளைக் கொடுத்தார். முதலில், "சடங்குகள் செய், தானம் கொடு" என்றார். வசந்தன் அதைச் செய்தான். சிறிது காலம் நிம்மதி இருந்தது, பிறகு மீண்டும் பழையபடி குழப்பம் வந்தது. வசந்தன் குருவிடம் கேட்டான், "குருவே, நீங்கள் சொன்னதைச் செய்தேன். ஆனால் அது நிலைக்கவில்லையே?" குரு சொன்னார், "அப்படியானால் அதை விட்டுவிடு (ஹேயம் - நீக்கப்பட வேண்டியது). அது ஒரு கருவி மட்டுமே, இலக்கல்ல." பிறகு குரு, மூச்சுப் பயிற்சி, தியானம் எனப் பலவற்றைக் கொடுத்தார். ஒவ்வொன்றையும் ஒரு கட்டத்தில் வசந்தன் கடந்து வந்தான். குரு ஒவ்வொரு முறையும், "இதுவும் ஒரு நிலைதான், இதையும் தாண்டிச் செல்" என்று சொல்லிக்கொண்டே இருந்தார். வசந்தனுக்கு ஒரு சந்தேகம் வந்தது. "குருவே, நீங்கள் எதைக் கொடுத்தாலும், ஒரு கட்டத்தில் அதை 'விட்டுவிடு' என்று சொல்கிறீர்கள். அப்படியானால், இந்த உலகில் நாம் எதை அடைந்தாலும் அதை ஒருநாள் விட்டுவிடத்தான் வேண்டுமா? எதற்காவது 'இதை விடாதே, இதுதான் முடிவு' என்ற அந்தஸ்து உண்டா?" குரு அவனுக்கு ஒரு உதாரணம் சொன்னார். வசந்தா, ஒருவன் தங்க நகையைத் தேடி ஒரு நகைக்கடைக்குச் செல்கிறான். கடைக்காரர் முதலில் ஒரு கவரிங் நகையைக் காட்டுகிறார். அவன் 'இது வேண்டாம்' (ஹேயம்) என்று ஒதுக்குகிறான். பிறகு ஒரு செம்பு கலந்த நகையைக் காட்டுகிறார். அதையும் அவன் ஒதுக்குகிறான். கடைசியாக, கடைக்காரர் சுத்தமான 24 காரட் தங்கத்தை அவனிடம் கொடுக்கிறார். இப்போது அந்த மனிதன் அதை ஒதுக்குவானா?" வசந்தன் சொன்னான், "இல்லை குருவே, அதைத்தான் அவன் தேடி வந்தான். அதை அவன் ஒதுக்க மாட்டான்."குரு இப்போது விளக்கினார்: "வேதங்களும் அப்படித்தான். அவை உலக இன்பங்களை 'விலக்க வேண்டியவை' என்று சொல்கின்றன. உடலை 'மாறக்கூடியது' என்று ஒதுக்குகின்றன. மனதை 'நிலையானது அல்ல' என்று சொல்கின்றன.

ஆனால், 'ஆத்மா' அல்லது 'பிரம்மம்' என்று வரும்போது, வேதம் ஓரிடத்தில் கூட 'இதை நீக்கிவிடு' (ஹேயத்வம்) என்று சொல்லவில்லை. மாறாக, 'அதில் நிலைபெறு' என்றுதான் சொல்கிறது.

இந்தச் சூத்திரம் (ஹேயத்வா-வசனாச்ச) இதைத்தான் சொல்கிறது. வேதம் எதை 'வேண்டாம்' என்று சொல்லவில்லையோ, அதுவே மேலான உண்மை. ஒருவேளை ஆத்மாவும் ஒரு தற்காலிகமான விஷயமாக இருந்திருந்தால், 'இதையும் தாண்டிப் போ' என்று வேதம் சொல்லியிருக்கும். அப்படிச் சொல்லாததால், ஆத்மாவே இறுதியான உண்மை."வசந்தன் கேட்டான், "ஏன் வேதம் அதை 'வேண்டாம்' என்று சொல்லவில்லை?"

குரு சிரித்தார். "நீயே உன் ஆத்மா. உன்னை நீயே எப்படி வேண்டாமென்று ஒதுக்க முடியும்? நீ கண்ணாடி முன்னால் நின்று உன் ஆடைகளைக் கழற்றி எறியலாம், உன் ஆபரணங்களை நீக்கலாம். ஆனால், உன்னையே நீ நீக்க முடியுமா? முடியாது. எது நீக்கப்பட முடியாததோ , அதுவே நீ. அதுவே பரம்பொருள்."

வசந்தன் இப்போது புரிந்துகொண்டான். தேடுதல் என்பது எதையோ புதிதாக அடைவதல்ல, மாறாக வேண்டாதவற்றை (ஹேயம்) ஒவ்வொன்றாக நீக்கிவிட்டு, எதை நீக்க முடியாதோ அந்தப் பரம்பொருளாகவே நின்றுவிடுவதுதான்.



1. காலை 7:30-க்குள் தர்ப்பணம் செய்யலாமா?

விடை: தவிர்க்க முடியாத சூழ்நிலையில் (ஆபத் தர்மமாக) செய்யலாம். ஆனால், அந்நேரத்தில் அமாவாசை திதி இருத்தல் கட்டாயம்.

சாஸ்திரப் பிரமாணம்:

« अपराह्णः पितॄणां तु पूर्वो वै देवकर्मणि

(பொருள்: பித்ரு காரியங்களுக்கு அபராஹ்ணமே [மதியமே] முக்கிய காலம்.)

ஆபத்-கால விதி:

« अकृतात् कल्पितं श्रेयः » (வைத்தியநாத தீக்ஷிதீயம்)

(பொருள்: முழுமையாக விடுபடுவதை விட, காலையிலாவது [கௌண காலத்தில்] செய்து முடிப்பது நன்று).

நமது பாடசாலையில் கோபூஜை சிறப்பாக நடைபெற்றது



